# 07 இயேசுவின் சீடர்களாவோம்

எனது பெயர் பேதுரு; எனது சகோதரன் அந்திரேயா, நாங்கள் மீனவச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். கலிலேயா கடலுக்கு சென்று வலைகளை வீசி மீன் பிடிப்பது எங்களது நாளந்த தொழிலாகும். நாங்கள் ஒருநாள் கடலில் வலை வீசி மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது, இயேசு தம்மைப் பின்பற்றும்படி எம்மை அழைத்தார். அச்சம்பவத்தை நீங்களும் அறிய விரும்புகிறீர்களா?

## முதல் சீடர்களை அழைத்தல்

*மத்தேயு 4:18-22*



ஒரு நாள் இயேசு கலிலேயா கடலோரமாய் நடந்துவருகிற போது, நாங்கள் கடலில் வலைவீசிக் கொண்டிருந்தோம். அப்பொழுது அருகே வந்த இயேசு எங்களைப் பார்த்து **“என் பின்னே வாருங்கள், நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்”** என்றார். மீன்களைப் பிடித்து வந்த எமக்கு மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன் என்று இயேசு கூறியது, ஆச்சரியத்தை அளித்தாலும் உடனே கீழ்ப்படிந்து வலைகளை விட்டு இயேசுவைச் சந்தோசமாகப் பின்பற்றினோம். அங்கிருந்து அப்பால் சென்றபோது வேறு இரு சகோதரர்களான செபதேயுவின் மகன் யாக்கோபும், யோவானும் தங்கள் தந்தையுடன் படகில் வலைகளைப் பழுதுபார்த்துக் கொண்டிருந்தார்கள். இயேசு எங்களை அழைத்தது போல அவர்களையும் அழைத்தார்.

படகையும், தந்தையையும் விட்டு அவர்களும் இயேசுவைப் பின்பற்றினார்கள். எங்களை விட வேறு பலரையும் அழைத்தார். அவர்களும் இயேசுவின் அழைப்புக்கு உடனே கீழ்ப்படிந்தார்கள். இயேசுவைப் பின்பற்றி இயேசுவின் சமூகத்தில் முதற் சீடரானோம்

இயேசுவின் அழைப்பை பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான் எவ்விதம் ஏற்றனர்?

1. கீழ்ப்படிவு
2. நாளாந்த தொழில் வாழ்கையை கைவிடல்
3. விசுவாசித்து பின் தொடரல்

*ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த லேவி என்னும் பெயருடைய ஆயக்காரனைக் கண்டு, "என்னைப் பின்பற்றி வா" என்றார். அவன் எல்லாவற்றையும் விட்டு அவருக்குப் பின் சென்றான்.*

*லூக்கா 5:27-32*

இயேசு பிலிப்புவைக் கண்டு 'என்னைப் பின்பற்றி வா' என்றார். பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டு, 'இயேசுவைக் கண்டேன்' என்றார். பின்பு அவரும் சீடர் ஆனார்.



பன்னிரு சீடர்களும் இயேசு சமூகத்தின் முன்னோடிகள் ஆவர். ஆண்டவராகிய இயேசு, "திருத்தூதர்". என்னும் ஓர் புதிய நாமத்தை அவர்களுக்கு வழங்கினார்.

சீடரில் பெரும்பான்மையோர் மீனவராக இருந்ததால், அவர்களது நாளாந்த வாழ்வில் வலைகளைப் பழுதுபார்ப்பது, வலைகளை வீசி மீன் பிடித்தல் போன்ற கடமைகளிலிருந்து விலகி, இயேசு சமூகத்தில் மனிதரைப் பிடித்தல் என்ற விசேட பணி இவர்களுக்கு அளிக்கப்பட்டது. மனிதரைப் பிடிப்பவர் என்றால், **இயேசுவை முழுமையாக பின்பற்றுதல் ஆகும்.**



**இயேசுவை நம்பி, அவருடைய பண்புகளை உடையவராய் இருந்து, அவரைப் பின்பற்றி வாழ்வோரை, இயேசு சமூகத்தினர் என்று அழைப்பர்.**




### சீடர்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்புகள்

1. தமது நாளாந்த கடமைகளை விட்டு ஆண்டவர் இயேசுவுடன் கூட இருந்து பணிபுரிதல்.
2. சகல இடங்களுக்கும் சென்று நற்செய்தி அறிவிப்பு பணியில் ஈடுபடல்.
3. நோய்களைக் குணமாக்குதல், பேய்களைத் துரத்துதல்.

### ஒரு சீடருக்கு இருக்கவேண்டிய பண்புகள்

1. ஆண்டவராகிய இயேசுவை தம் வாழ்வில் பின்பற்றுபவர்களாக இருத்தல் வேண்டும்.
2. இயேசுவில் நம்பிக்கை உடையவராக இருத்தல் வேண்டும்.
3. தாழ்மையுள்ளவராக இருக்க வேண்டும்.
4. சிறுவர்களை நேசிக்க வேண்டும்.
5. தமது உடமைகளை விற்று தரித்திரருக்கு கொடுத்தல் வேண்டும்.
6. பணிவிடைக்காரனைப் போல் மற்றவர்களுக்கு சேவை செய்தல் வேண்டும் உதாரணம் - இயேசு சீடரின் கால்களைக் கழுவுதல்.
7. சுயநலம் இன்றி தனது நேரத்தை ஒடுக்கப்பட்டவர்களுக்காகப் பாவிக்கவேண்டும்.


இலவச விநியோகத்திற்காக



## நாம் கற்றுக்கொண்டவை

- இயேசுவைப் பின்பற்றியோர் "இயேசு சமூகத்தினர்" என அழைக்கப்பட்டனர்.
- இயேசுவால் தெரிவுசெய்யப்பட்ட சீடருக்குப் பல புதிய பணிகள் அளிக்கப்பட்டது.
- நம்மையும் இறைசெய்தி அறிவிக்கும் நற்சீடராக அழைக்கிறார்.

## செயற்பாடு

1. இயேசுவால் அழைக்கப்பட்ட பெண்சீடர்களின் பெயர்களைத் தருக. லூக்கா *3: 1-3*
2. இயேசு 72 பேரை இறைபணிக்காக அனுப்பிய சம்பவத்தை சுருக்கமாக எழுதுக. லூக்கா *10*
3. "இயேசு சமூகத்தவர் நான்" எனத் தீர்மானித்து இறைபணிக்காக நீர் செய்யவேண்டிய பணிகள் 5 தருக.
4. இயேசு சீடர்களுக்கு கட்டளையிட்டவற்றை பின்வரும் விவியப்பகுதியில் இருந்து உமது அப்பியாசக் கொப்பியில் எழுதுக.